2013 ஏப்ரல் 22]

தரம் உயர்த்துவதற்கு வழிவகை செய்து தரப்படவில்லை என்ற செய்தியை மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இருந்தபோதிலும், மத்திய அரசு கைவிரித்தாலும்கூட, தாயுள்ளம் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பரிசீலித்து வருகிறார்கள் என்ற நல்ல செய்தியையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நியாயமான கோரிக்கை விதிகளுக்குட்பட்டிருக்கின்ற கோரிக்கையாக இருப்பின் அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்வதில் முதன்மையாக இருக்கக்கூடிய தமிழக அரசாங்கத்தினுடைய தலைசிறந்த முதலமைச்சர், இன்றைய முதல்வராகவும், நாளைய பிரதமராகவும் வரக்கூடிய வல்லமை படைத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய முறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 296, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

296—

இதய நோய் சிகிச்சைப் பிரிவு

***14984—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது.

ஆனால், இதய நோய் அறுவை சிகிச்சைக்கென தனிப் பிரிவு இல்லை. இதனைத் தொடங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போதைக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இதய நோய் சிறப்பு மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவு அமைத்துத் தர வேண்டும். ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோபிளாஸ்டி, பைபாஸ் சர்ஜரி போன்ற அறுவை சிறப்பு சிகிச்சைகளுக்காக மக்கள் மதுரை, சென்னை அல்லது திருவனந்தபுரம் என்று நெடுந்தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அதிக சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அதிகமாக கார்டியோ தொராசிக் சர்ஜன்கள் மற்றும் நிபுணர்கள் நியமிக்கப்படவேண்டும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பேராசிரியர்களை அதிகமாக நியமித்து, ஒன்றுக்கு மூன்று விகிதாச்சார அடிப்படையில் உருவாக்கி, அனைத்து அரசு மருத்துவப் பிரிவுகளிலும் பேராசிரியர்கள் ஓய்வுபெறும் வயதை உயர்த்தவும் அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் 2004 ஆம் ஆண்டிலே கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துவக்கப்பட்டு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. இங்கு எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பிற்கு ஆண்டுதோறும் 100 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இங்குள்ள மருத்துவமனையில்* Department of Cardiology—*இருதய நோய் மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவில் ஒரு உதவிப் பேராசிரியர் பதவி உள்ளது. இதய நோயாளிகளுக்குத் தேவையான வசதியுடன் 24 மணி நேரமும் செயல்படும் 18 படுக்கை வசதிகளுடன்கூடிய* I.C.C. *தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும்*

2013 ஏப்ரல் 22]

என்டாஸ்கோப் செய்யப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகால புள்ளிவிவரப்படி ஆண்டொன்றுக்கு 160 உள் நோயாளிகளும், 55,000 புற நோயாளிகளும் இருதய நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதய நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுக்கென நியமிக்கப்பட்ட உதவி பேராசிரியர் பணியிடம் தற்போது காலியாக உள்ளது. இந்தப் பணியிடத்தை விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லாததால், நோயின் தாக்கத்தைப் பொறுத்து, ஆண்டொன்றுக்கு 10 முதல் 12 நோயாளிகள் 108 ஆம்புலன்ஸ் சேவை மூலமாக, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்க, இதய அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்களும், அவர்களுக்கு உதவியாக பயிற்சி பெற்ற மயக்கவியல் மருத்துவர்களும், உதவிப் பேராசிரியர்கள், இதர உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

இதய நோய் அறுவை சிகிக்சைக்கென சிறப்பு அறுவை சிகிச்சை அரங்கம் அமைக்கப்பட வேண்டும். தற்போது மிகக் குறைந்த அளவில் நோயாளிகள் மட்டுமே இதய நோய் மேல் சிகிச்சைக்கு இங்கு வருவதாலும், இவர்களை அருகில் உள்ள திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதாலும், தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு—அதாவது, Department of Thoracic Surgery என்று சொல்லக்கூடிய துறையை துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு அங்கு இல்லை என்பதாலேயே மக்கள் அங்கு வருவதில்லை. நேரடியாக திருவனந்தபுரம் சித்திரைத் திருநாள் மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளை அணுகிச் செல்கிறார்கள். ஆகையால் இங்கு

அறுவை சிகிச்சை பிரிவு தொடங்கும்போது அதிகமான நோயாளிகள் வர வாய்ப்பிருக்கிறது. அதற்கான தேவை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மருத்துவமனைகளில் ஓய்வுபெற்ற பிறகும் அவர்களின் சிறந்த அனுபவம் காரணமாக பேராசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள். தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். எனவே, அனுபவம் என்பதுதான் முக்கியம். உயர் மருத்துவக் கல்விப் பிரிவில் அதிக ஆசிரியர்களை உருவாக்க வாய்ப்பு இருக்கும். ஆகையால் பேராசிரியர்களின் ஓய்வுபெறும் வயது வரம்பை உயர்த்தவும், ஓய்வு பெற்ற பிறகும் அத்தகைய நிபுணர்களை பணியில் விசிட்டிங் புரொபசர்களாகவோ, பேராசிரியர்களாகவோ, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புகளை உருவாக்க முடியுமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இதய நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

முற்பகல் 11–30

இதுமட்டுமல்லாமல், இனி வருங்காலங்களில் மருத்துவமனைக்கு வரும் இதய நோயாளிகளின் தேவையினைக் கருத்தில்கொண்டு, இதய அறுவை சிகிச்சை நோய் பிரிவு தொடங்குவது குறித்தும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]